# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2015 யு‘லை

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

---

**மேலோட்டமான பார்வை :**

இந்த வினாப்பத்திரம் 100 புள்ளிகளை உள்ளடக்கிய மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக மூன்று வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் இதில் இரண்டு வினாக்கள் விடையளிக்கப்பட வேண்டியவையாகும்.

**பொதுவான கருத்துக்கள் :**

இந்த வினாப்பத்திரத்திற்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை குறைந்த மட்டத்திலேயே இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாப்பத்திரத்தின் பிரயோக/**கணிப்பீட்டுப்** பகுதிகள் மற்றும் **கோட்பாட்டுப்** பகுதிகள் ஆகியவற்றிற்கு மிகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**பகுதிவாரியான செயலாற்றுகை :**

பகுதி A, 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. வினா இலக்கம் 3 ஐத் தவிர இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருந்தது. இந்தப் பகுதிக்குரிய வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு :

| வினா இல. | செயலாற்றுகை வீதம் |
|---|---|
| 1 | திருப்திகரமானது |
| 2 | நன்று |
| 3 | மிகக் குறைவு |
| 4 | திருப்திகரமானது |

பகுதி B ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இந்தப் பகுதியிலுள்ள சகல வினாக்களுக்குமான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை குறைந்த மட்டத்திலேயே இருந்தது. இந்தப் பகுதிக்குரிய வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு :

| வினா இல. | செயலாற்றுகை வீதம் |
|---|---|
| 5 | குறைவு |
| 6 | மிகக் குறைவு |
| 7 | குறைவு |

பகுதி C ஆனது 50 புள்ளிகளுக்காக மூன்று வினாக்களில் இரண்டு தெரிவு வினாக்களுக்கு விடையளிக்கக் கோரியிருந்தது. வினா இலக்கம் 9 ஐத் தவிர இந்தப் பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையானது திருப்திகரமானதாக இருந்தது. இந்தப் பகுதிக்குரிய வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு :

| வினா இல. | செயலாற்றுகை வீதம் |
|---|---|
| 8 | நன்று |
| 9 | மிகக் குறைவு |
| 10 | திருப்திகரமானது |

## விபரமான அறிக்கை

### வினா இல. 01 (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவின் பகுதி (a) யில் நல்ல கடனுக்கான உதாரணங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன் பகுதி (b) யில் சேமிப்புகள் மற்றும் மூதலீடுகளுக்கு இடையிலான வேறுபாடும் பரீட்சிக்கப்பட்டது.

**செயலாற்றுகை :** இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

பகுதி (a) யிற்கான விடைகள் நன்றாக எழுதப்பட்டிருந்ததுடன் பகுதி (b) யிற்கான விடைகள் திருப்தி கரமானதாக அமையவில்லை. பகுதி (b) இல் அதிகளவான பரீட்சார்த்திகள் ஒரேயொரு வரன்முறையைப் பயன்படுத்தியே வேறுபடுத்தியுள்ளனர். அதாவது, 03 புள்ளிகளுக்காக குறுங்கால வருவாயிலிருந்து நீண்டகால வருவாய்.

சில பரீட்சார்த்திகளால் சேமிப்புகளுக்கும் சேமிப்புக் கணக்குகளுக்குமிடையேயான வேறுபாட்டை அடையாளங்காண முடியவில்லை. அதிகளவான பரீட்சார்த்திகள் முதலீடுகளிலிருந்து சேமிப்புகளை வேறுபடுத்துவதற்குப் பதிலாக சேமிப்புக் கணக்குகளை வேறுபடுத்தியிருந்தனர்.

**பொதுவான தவறுகள் :**

- முதலீடுகளிலிருந்து சேமிப்புகளை வேறுபடுத்துவதற்கு ஒரேயொரு வரன்முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.
  அதாவது, வருவாய் - பரீட்சார்த்திகள் சேமிப்புகளுக்காக குறுங்கால வருவாய்களைக் குறிப்பிட் டிருந்த அதே வேளை முதலீடுகளுக்காக நீண்டகால வருவாய்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பாடத் தொகுதியை வாசிக்கவும்.

### வினா இல. 02 (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினா **3 Star PLC.** இற்காக தொழிற்படு மூலதன சுழற்சிக் காலத்தைக் கணிப்பிடுவதைப் பரீட்சித்துள்ளது. செயலாற்றுகையானது நல்ல முறையில் காணப்பட்டதாயினும் பின்வரும் தவறுகளும் இங்கு அவதானிக்கப்பட்டன :

- சில பரீட்சார்த்திகள் தொக்கு, வருமதிகள், சென்மதிகள் போன்றவற்றின் சராசரிகளைக் கருத்திலெடுக்கத் தவறியிருந்தனர்.
- சரியான வகுக்கும் எண் (பகுதி எண்) தொடர்புபடுத்தப்படவில்லை.
  உதாரணமாக, விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கிரயத்திற்கான சராசரி தொக்கு.
  கொள்வனவுகளுக்கான சராசரிச் சென்மதிகள் போன்றவை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- பாடத் தொகுதியிலுள்ள இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட பயிற்சிகளைச் செய்து பார்க்கவும்.

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

தொடர்புபட்ட கிரயம் / தொடர்பற்ற கிரயம் ஆகியவற்றின் மீதான அறிவையும் தொடர்புபட்ட கிரயங்களின் அடிப்படையில் ஒரு கட்டளையினை ஏற்றுக் கொள்வதற்கான / நிராகரிப்பதற்கான நிலைமையினை முடிவு செய்தல் மீதான அறிவையும் பரீட்சிப்பதற்கு இந்த வினா எதிர்பார்த்திருந்தது.

இந்த வினாவிற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை மிகக் குறைவானதாக இருந்ததுடன் அதிகளவான பரீட்சார்த்திகளுக்கு பின்வரும் காரணங்களால் இந்த வினாவுக்கு புள்ளிகளைப் பெற முடியாது போயிருந்தது :

**தவறுகளுக்கான காரணங்களாக இருக்கக்கூடியவை :**

- களஞ்சியங்களில் இருக்கின்ற 20 சதுர மீற்றருக்காகப் பிரயோகிக்கக்கூடிய மாற்றீட்டுக் கிரயம் பற்றி கருத்திலெடுக்கப்படவில்லை.
- கட்டளைக்காகத் தேவைப்பட்ட 120 சதுர மீற்றருக்குப் பதிலாக 100 சதுர மீற்றர் கருத்தில் எடுக்கப்பட்டிருந்தது.
- பெரும்பாலானவர்கள், வேலையின்றியிருந்த ஊழியர் கூலிக் கிரயத்தை கட்டளையுடன் தொடர்புபட்டதாகக் கருத்தில் எடுத்திருந்தனர்.
- ஊக்குவிப்புத் தொகைகள் கட்டளையுடன் தொடர்புபடாதவைகளாகக் கருத்திலெடுக்கப்பட்டன.
- மேந்தலையின் மேலதிக அதிகரிப்பு கட்டளையுடன் தொடர்புபடாததாகக் கருத்திலெடுக் கப்பட்டது.
- அதிகளவான பரீட்சார்த்திகள் தொடர்புபட்ட மற்றும் தொடர்புபடாத கிரயங்களைச் சரியாக இனங்கண்டிருக்கவில்லை.
- பகுதி (b) யிற்காக எந்தவொரு செய்கை வழிகளும் காட்டப்படாது தீர்மானம் எழுதப்பட்டிருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவுக்கு விடையளிக்க முன் அதனைச் சரியாக வாசிக்கவும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள இதே வகையான வினாக்களில் பயிற்சி செய்க.
- கையெழுத்தினை மேம்படுத்துக.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் நிகழ்தகவு தரப்படும்போது ஒவ்வொரு உத்தியிலும் எதிர்பார்க்கப் பட்ட விற்பனைகளை இந்த வினா சோதித்துள்ளது.

**செயலாற்றுகை :** பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும் பின்வரும் காரணங்களால் சில பரீட்சார்த்திகள் பிழைவிட்டிருந்தனர் :

- நிகழ்தகவு வீதங்கள் கணிப்பீட்டில் கருத்திலெடுக்கப்படவில்லை.
- நிகர வருமானத்தைக் கணிக்கும்போது மாறுங் கிரயம் புறக்கணிக்கப்பட்டிருந்தது.
- சில பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட்ட விற்பனைகளைச் சரியாகக் கணிக்கத் தவறியிருந்தனர்.
- நிகழ்தகவு வீதங்கள் தரப்படும்போது எதிர்பார்க்கப்பட்ட விற்பனைகளை எவ்வாறு கணிப்பது என்பதில் தடுமாற்றம் காணப்பட்டிருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- இந்தப் பாடப் பரப்பினை (எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி மற்றும் நிகழ்தகவு) முறையாகக் கற்கவும்.
- இந்த வகை வினாக்களைத் தீர்வு செய்வதற்கான கணிதவியல் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும்.

## பகுதி B

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா, இரண்டு உற்பத்திப் பொருட்களின் பங்களிப்பினைத் துணிகின்ற நேர்கோட்டுச் நிரற்படுத்தல் முறை (Linear programming method) மீதான அறிவைப் பரீட்சிக்கிறது.

**செயலாற்றுகை :**

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு நல்ல புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பகுதி (a) யிற்குச் சரியாக விடையளித்திருந்த போதிலும் பகுதி (b) மற்றும் பகுதி (c) ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்கவில்லை.

(a) தரப்பட்ட தகவல்களில் இருந்து, பங்களிப்பு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட காரணிகளின் அலகிற்கான பங்களிப்பு ஆகியவற்றை மிக இலகுவாகக் கணிக்கக்கூடியதாக இருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. அவர்களுடைய கணித அறிவு மிகக் குறைவானதாக இருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

(b) பகுதி (a) யிற்கான சரியான பங்களிப்புகளைக் கணிப்பிடாததன் காரணமாக பெரும்பாலானவர் களால் தீர்மான மாறி மற்றும் ஏனைய செயற்பாடுகளைச் சூத்திரப்படுத்துவதற்கு (முறைப் படுத்துவதற்கு) முடியாமல் போயிருந்தது. "இலும் குறைவான" (<) என்ற அடையாளக் குறி பெரும்பாலானவர்களால் கவனிக்கப்படவில்லை. பரீட்சார்த்திகளில் சிலர் தீர்மான மாறிகள், நோக்கச் சார்புகள், மட்டுப்பாடுகள் போன்றவற்றை சமன்பாடுகள் வடிவத்தில் விளக்குவதற்குப் பதிலாக பொதுப்படையான வார்த்தைகளில் விளக்கியிருந்தனர்.

(c) இந்தச் சமன்பாடுகளைத் தீர்க்கும்போது பெரும்பாலானவர்களால் மீண்டும் குறைந்தளவான கணிதத் திறன்கள் வெளிக்காட்டப்பட்டன.

(d) மேலுள்ள பலவீனங்கள் காரணமாக பரீட்சார்த்திகளில் பெரும்பாலானவர்கள் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. சிலர் வரைபு ரீதியான முன்வைப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், வரைபு ரீதியான முன்வைப்புக்குத் தகுந்தபடி புள்ளிகள் வழங்கப்பட்டன.

**பொதுவான தவறுகள் :**

- எண் பெறுமானங்களைக் காட்சிப்படுத்தும்போது கணிதத் தவறுகள் காணப்பட்டன.
- நோக்கச் சார்பு பற்றிய விளக்கம் காணப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி பெறவும்.
- உங்களது செய்கை வழிகளை எப்பொழுதும் காட்சிப்படுத்துங்கள்.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா தனிச்சங்களின் வழங்கல் தொடர்பான கோட்பாட்டு அறிவையும் கடன் கிரயங்களையும் ஒட்டுமொத்த WACC யைக் கணிப்பதையும் பரீட்சித்துள்ளது.

**செயலாற்றுகை :** இந்த வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகவும் திருப்தியற்றதாக இருந்ததுடன் செயலாற்றுகை மட்டம் மிகவும் அடிமட்டத்தில் இருந்தது.

**பகுதி (a) இற்கான செயலாற்றுகை** – திருப்திகரமாக இருக்கவில்லை ஆயினும் இந்த வினாவின் ஏனைய உப பகுதிகளுடன் ஒப்பிடுகையில் வங்கிக் கடன் ஒன்றிற்கு மேலாக தனிச்சங்களின் சில பொதுவான அனுகூலங்களை எழுதுவதற்கு பரீட்சார்த்திகளுக்கு இயலுமாகவிருந்தது.

**பகுதி (b) இற்கான செயலாற்றுகை** – திருப்திகரமாக இருக்கவில்லை. வினாவானது தெரிவு I தனிச்சம் மீட்கத்தக்கது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தது ஆயினும் பரீட்சார்த்திகளில் பெரும்பாலான வர்கள் மீட்கப்பட முடியாத தனிச்சங்களின் கிரயச் சூத்திரத்தின் கீழ் கணிப்பீடு செய்திருந்தனர். இது பிழையானதாகும். வினாவானது தனிச்சங்கள் மீட்கத்தக்கவை எனக் குறிப்பிட்டிருந்ததால் கடன் கிரயத்தைக் கணிப்பிட IRR முறையே பயன்படுத்த வேண்டியதாகும்.

மேலும், தனிச்சத்தின் தற்போதைய பெறுமதி, அதாவது வருடம் “0” பெறுமதி ரூ.102/- எனும் சந்தைப் பெறுமதி ஆகும். ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் ரூ100/- இனை வருடம் “0” பெறுமதியாகப் பயன்படுத்தியிருந்தனர். இது பிழையானதாகும்.

எவ்வாறாயினும், IRR முறையின் கீழ் கணிப்பீடு செய்யாதவர்கள் பின்வருவனவற்றைச் சரியாக அடையாளங் கண்டிருக்கவில்லை :

1) வட்டி வருமானம் சம மதிப்பு மீது கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.
2) தனிச்சத்தின் சம மதிப்பு வருடம் “0” இற்காக எடுக்கப்பட்டிருந்தது.
3) மீட்கத்தக்க பெறுமதி ரூ.102/- ஆனது 5 ஆண்டுகளுக்காக எடுக்கப்பட்டிருந்தது.
4) பிழையான IRR சூத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.
5) IRR சூத்திரத்தில் எண் பெறுமானங்களின் பிரதியீடு சரியாகச் செய்யப்பட்டிருக்கவில்லை.

வினாவில் வரியீட்டைக் கருத்திற்கொள்ள வேண்டியதில்லை எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும், பெரும்பாலானவர்கள் தெரிவு 2 இன் கிரயத்தைக் கணிக்கும்போது வரி வீதம் ஒன்றினைக் கருத்திலெடுத்திருந்தனர்.

தெரிவு 3 இற்குக்கூட, பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணிப்பீட்டிற்கு வரி வீதத்தினைக் கருத்திற் கொண்டு 5 வருடங்களுக்கான மொத்த வட்டிக் கிரயத்தினைக் கணித்திருந்ததுடன் அதனை வங்கிக் கடன் கிரயமாகக் காண்பித்திருந்தனர்.

**பகுதி (c) யிற்கான செயலாற்றுகை** – பகுதி (a) மற்றும் பகுதி (b) யினைச் சரியாக தீர்க்காததன் காரணமாக இந்தப் பகுதிக்கான செயலாற்றுகையும் திருப்திகரமானதாக இருக்கவில்லை. அத்துடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் WACC இனைக் கணிப்பதற்குச் சரியான சூத்திரத்தைப் பயன்படுத்தி யிருக்கவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி செய்யவும்.
- மீட்கத்தக்க கடன் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றுக்கான சூத்திரங்களைச் சரியாகக் கற்கவும்.
- IRR இனைக் கணிக்கும்போது +/- குறியீடுகளில் கவனமாக இருக்கவும்.
- சூத்திரத்திற்கு எண் பெறுமானங்களைப் பிரதியிடும்போது கவனமாக இருக்கவும்.
- வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள கழிவு அட்டவணையைப் பயன்படுத்தவும்.

பழைய பாடத்திட்டத்தின் கீழ் இந்தப் பலவீனங்கள் முன்னைய பரீட்சகரின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை இன்னும் தொடர்கின்றன.

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா நான்கு பகுதிகளை உள்ளடக்கியுள்ளதுடன், சமப்பாட்டுப் புள்ளி, இலாபம் போன்ற எல்லைக் கிரயத்துடன் தொடர்புபட்ட பரப்புகள் மீதான அறிவைப் பரீட்சித்துள்ளது.

**செயலாற்றுகை :** ஒட்டுமொத்தச் செயலாற்றுகை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. குறிப்பிடத் தக்களவு பரீட்சார்த்திகள் பகுதி (a) யிற்கு மட்டும் விடையளித்திருந்தனர். ஏனைய பகுதிகள் செய்யப்படாது அல்லது தெளிவற்ற விடைகளாக இருந்தன.

**பகுதி (a) செயலாற்றுகை** – அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கான இரண்டு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b) செயலாற்றுகை** – பல தெளிவற்ற கணிப்பீடுகளை விடைகளில் காணக்கூடியதாக இருந்தது.

**பகுதி (c) செயலாற்றுகை** - பல தெளிவற்ற கணிப்பீடுகளை விடைகளில் காணக்கூடியதாக இருந்தது.

**பகுதி (d) செயலாற்றுகை** - பல தெளிவற்ற கணிப்பீடுகளை விடைகளில் காணக்கூடியதாக இருந்தது.

**பொதுவான தவறுகள்** :

- பகுதி (b) இன் கணிப்பீட்டிற்கு வெளியீடுகளின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளப்படவில்லை.
- வருடாந்த இலாபத்தினை துணியும்போது வருடாந்த நிலையான கிரயமான ரூ.330,000 * 12 கருத்திற் கொள்ளப்படவில்லை.
- பகுதி (c) இல் சமப்பாட்டு அலகுகளைத் துணிவதற்கு, ஒட்டுமொத்த நிலையான கிரயம் கவனத்திற் கொள்ளப்படவில்லை.
- ஒரு சிறுதொகைப் பரீட்சார்த்திகள் பகுதி (d) யிற்கு விடையளித்திருந்தனர்.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவைக் கவனமாக வாசிக்கவும்.

## பகுதி C

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினா நியமக் கிரயமிடலின் அனுகூலங்கள் மற்றும் வரையறைகள் தொடர்பிலான கோட்பாட்டு அறிவையும் அதனுடன் தொடர்புபட்ட முரண்களைக் கணிப்பீடு செய்வதையும் பரீட்சித்துள்ளது.

ஒட்டுமொத்த செயலாற்றுகை நன்றாக இருந்தது. பரீட்சார்த்திகளுக்கு, விசேடமாக பகுதி (b) இலுள்ள நேர் பொருள் A இற்கும் பகுதி (c) இற்குமான முரண்களைச் சரியாகக் கணிப்பதற்கு முடிந்திருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் நியம வீதமாக ரூ.55/- ஐ எடுத்ததன் மூலம் நேர் பொருள் B இற்கான விலை முரணைக் கணிப்பதில் தவறு விட்டிருந்தனர். அவர்களில் பலர் பகுதி (d) மற்றும் பகுதி (e) இனை கணிப்பீட்டு வழுக்களுடன் கணித்திருந்தனர்.

**பொதுவான தவறுகள் :**

- ரூ.55/- இனை நியம வீதமாகக் கருதியிருந்தமை.
- மொத்த நியம நேரப் பொருட் கிரயத்தையும் அதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொதிகளின் உண்மையான எண்ணிக்கையையும் கணிப்பிட இயலாமல் இருந்தமை.
- விளைவு மற்றும் திட்டமிடல் முரண்களுக்காக பிழையான சூத்திரங்கள் பயன்படுத்தப்பட்டமை.
- முரண்கள் பாதகமானதா (A) அல்லது சாதகமானதா (F) என்பதைக் குறிப்பிடாமை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவைக் கவனமாக வாசிக்கவும்.
- பாதகமானது / சாதகமானது என்பதைக் குறிப்பிடும்போது கவனமாக இருக்கவும்.
- முரண்களது சூத்திரங்களின் பின்னால் உள்ள எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளுங்கள்.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவைத் தெரிவு செய்வதைத் தவிர்த்திருந்தனர். 2% மான பரீட்சார்த்திகள் மட்டுமே இந்த வினாவைத் தெரிவு செய்திருந்தனர். அவ்வாறு தெரிவு செய்தவர்களுக்கு பகுதி (a) யிற்கான கணிப்பீட்டை மாத்திரமே சரியாகச் செய்ய முடிந்திருந்ததுடன் பகுதி (b) யிற்கான கணிப்பீட்டைச் சரியாகச் செய்ய இயலவில்லை.

ஆனால் இந்த வினாவுக்கு விடையளித்த அந்த 2% மான பரீட்சார்த்திகளில் ஒருவருக்கு மட்டுமே இந்த வினாவுக்கான மொத்தப் புள்ளி 25 ஐயும் பெற முடிந்திருந்தது. இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை மிகவும் கீழ் மட்டத்திலேயே இருந்தது.

**பொதுவான தவறுகள் :**

- உரிய மாதங்களுக்குப் பிரயோகிக்கத்தக்க விற்பனை அலகுகள் கணிப்பீடு செய்யப்படவில்லை.
- உற்பத்திப் பாதீட்டில் இறுதித் தொக்கு (இருப்பு) காட்டப்படவில்லை.
- உற்பத்திப் பாதீட்டில் ஆரம்பத் தொக்கு (இருப்பு) காட்டப்படவில்லை.
- கொள்வனவுப் பாதீடு மற்றும் காசுப் பாதீடு என்பன தயாரிக்கப்படவில்லை.
- பகுதி (c) செய்யப்படவில்லை.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- இந்தகைய வகை கணிப்பீடுகளில் காசு வெளிப்பாய்வுகள் மற்றும் காசு உட்பாய்வுகளின் குறிகள் காட்டப்படும்போது கவனமாக இருக்கவும். (கிரயம் அடைப்புக்குறியினுள் காட்டப்பட வேண்டும் என்பதோடு உட்பாய்வுகள் அடைப்புக்குறி இன்றிக் காட்டப்படுதல் வேண்டும்)
- எப்பொழுதும் உங்களது மேலதிக செய்கை வழிகளைக் காண்பிக்கவும்.
- பாதீடுகள் படிமுறையாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது பரீட்சார்த்திகளால் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். உதாரணமாக, உற்பத்திப் பாதீட்டினைத் தயாரிக்காமல் பரீட்சார்த்திகளால் நேர் பொருட் கொள்வனவுப் பாதீட்டினைத் தயாரிப்பதற்கு இயலாது போகும்.

**வினா இல. 10** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

இந்த வினா காசுப் பாய்வுகளை அடையாளங் காண்பதுடன் அத்தகைய காசுப் பாய்வுகளின் மீள் செலுத்துகைக் காலம், ARR, NPV, IRR ஆகியவற்றைக் கணித்தல் மற்றும் NPV கணிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானத்தை மதிப்பீடு செய்து "பணத்தின் காலப் பெறுமதி" எனும் எண்ணக்கருவை விவரிப்பதற்கு எதிர்பார்த்தது.

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகளால் 4, 5 ஆண்டுகளுக்கு மட்டும் நிலையான காசு வெளிப்பாய்வுகள் மற்றும் சேவைக் கிரயங்களை மாத்திரம் துணிவதற்கு / காண்பிப்பதற்கு முடிந்திருந்தது. சிலர் அடைப்புக்குறியைப் ( ) பயன்படுத்துவதன் மூலம் காசு வெளிப்பாய்வாக இதனைக் காட்டவில்லை.

மேலும், பெரும்பாலானவர்கள் மீள் செலுத்துகைக் காலம் மற்றும் ARR என்பவற்றை எவ்வாறு துணிவது என்பது பற்றி அறியாதவர்களாக இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**பொதுவான தவறுகள் :**

- இருக்கின்ற இயந்திரத்தின் ஒடிவுப் பெறுமதி 5 வருடங்களில் காட்டப்பட்டிருக்கின்றன.
- காசு உட்பாய்வுகள் மற்றும் காசு வெளிப்பாய்வுகள் என்பன போன்ற அடைப்புக்குறிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வேறுபடுத்தப்படவில்லை.
- மாறும் கிரயத்தின் வருடாந்த அதிகரிப்பு பிழையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.
- மூலதனப் படிகள் மீதான வரிச் சேமிப்புகள் காசுப் பாய்வுகளுக்காக கருத்திற் கொள்ளப் படவில்லை.
- இற்றைப் பெறுமதியினைக் கணிப்பதற்கு திரண்ட கழிவீட்டு வீதம் கருத்திலெடுக்கப்பட்டிருந்தது.
- IRR இனைக் கணிப்பதற்கு பிழையான சூத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**பரீட்சகரின் பரிந்துரைகள் :**

- வினாவைக் கவனமாக வாசிக்கவும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களில் பயிற்சி செய்யவும்.
- செயற்றிட்ட மதிப்பீடுகளில், காசு வெளிப்பாய்வுகளை அடைப்புக்குறிகளுடன் காட்டுவதில் கவனமாக இருக்கவும்.
- மேலதிக செய்கை வழிகளைக் காட்டவும்.

- * * * -